ர, ற, ல, ள, ழ. ண, ன. ந, வேறுபாடுகளை அறிய

பொள்ளாச்சி நசன் - 642 006, பேச - 98420 02957
web : www.thamizham.net email : pollachinasan@gmail.com

அரி - erode - (அரி, அரிய, அரிப்பு, அரிதல், அரித்தல்)
அறி - know - (அறி, அறிதல், அறிந்த, அறியும், அறியாத)

கடற்கரையில் மணல் அரிப்பு ஏற்பட்டுள்ளது.
தண்ணீர் ஓடினால் மண்அரிப்பு ஏற்படும்.
காய் அரிவது அரிவாள்மனையில்.
தோல் அரித்தால் சொறியத் தோன்றும்.
அனைத்தையும் அறியப் படித்தல் வேண்டும்.
பாடத்தை நன்கு அறிந்து கொண்டாயா ?

அணை - dam
அனை - all

அணையில் தண்ணீர் தேங்கியுள்ளது.
தீ அணைப்பு நிலையம் அருகில் உள்ளது.
தந்தை மகனை அணைத்து மகிழ்ந்தார்.
அனைவரும் உறவினர்.
அனைத்தும் அறிந்தோர் யாருமிலர்.

அலை - wave
அழை - call

கடலில் அலை பெரியதாக எழும்.
மனதை அலைபாய விடாதே.
வேலை தேடி நாயாய் அலைகிறான்.
அழைப்பு மணி அடிக்கிறது.
அழையாத வீட்டிற்குள் நுழையாதே.
நண்பர்களை விருந்துக்கு அழைக்கவும்.

அரை - half
அறை - room

ஒன்றில் பாதி அரை.
இடுப்பில் கட்டுவது அரை நாண் கயிறு.
மணி எட்டரை ஆகிறது.
இது வகுப்பறை.
இந்த அறை காற்றோட்டம் உடையது
ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தைத் திருப்பிக் காட்டு.

RangaRakes
tamilnavarasam.com

அகல் - lamp, move away
அகழ் - plough, dig

அகல்விளக்கு எரிகிறது.
அகலாது அணுகாது தீக்காய்வார் போல
அகழ்வாய்வு வரலாறு காட்டும். (அகழ் + ஆய்வு)
கிணறு அகழும் பணி நடக்கிறது.

அலகு - beak, unit
அழகு - beauty

குருவியின் அலகு கூர்மையானது.
அலகு என்பது எண்ணிக்கையின் அடிப்படை.
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
இந்த நாய்க்குட்டி அழகாக இருக்கிறது.

அவள் - she
அவல் - rice obtained from fried paddy

அவள் பாடம் படிக்கிறாள்.
அவள் என் சகோதரி.
நாய் அவளுடன் விளையாடுகிறது.
இனிப்பிலூறிய அவல் சுவை மிகுந்தது. (இனிப்பில் + ஊறிய)

அளி - give அழி - destroy அலி - eunuch

ஆசிரியர் இந்தப் புத்தகத்தை எனக்கு அளித்தார்.
தலைவர் கருத்தைத் தொகுத்தளித்தார்.
அழிப்பது எளிது. ஆக்குவது கடினம்.
கரிக்கோலால் எழுதியதை அழிப்பானால் அழி.
அலி இருபாலியல்பு உடையவர்.

அறம் - good things அரம் - file

நல்லவை செய்தல் அறம் எனப்படும்.
திருக்குறளில் அறம், பொருள், இன்பம் உண்டு.
கூர்மைப்படுத்த உதவகிற கருவி அரம்.

அறன் - good deeds அரண் - defence

நல்லவை செய்தல் அறன் ஆகும். (மகர ஈறு நகர ஈறாகத் திரிந்துள்ளது. அறம்-அறன்)
தமிழர் வாழ்வியல் அறன் வழிப்பட்டதே.
பாதுகாப்புடையது அரண்மனை.
நாட்டின் அரணாக இருப்பவர்கள் படை வீரர்கள்.

RangaRakes
tamilnavarasam.com

அல்லல் - distress அள்ளல் - take

துன்பப்படுவதை அல்லல் படுதல் என்கிறோம்.
அல்லல் பட்டு ஆற்றாது அழுத கண்ணீர்....
அள்ளி எடுத்தலை அள்ளல் எனலாம்.
நெல்லை அள்ளி மூட்டையில் கட்டினர்.

அல்ல - no அள்ள - take

இது உண்மை அல்ல.
அவை அல்ல நல்ல செயல்கள்.
நெல்லை அள்ள முறத்தைக் கொண்டுவா.
ஆற்றில் மணலை அள்ளுதல் அரிப்பை ஏற்படுத்தும்.

அள்ளி - take அல்லி - lily

அன்னை குழந்தையை அள்ளி அணைத்தார்.
கூந்தலை அள்ளி முடிந்து கொள்.
அல்லி மலர் தண்ணீரில் இருக்கும்.
அல்லி மலர் இரவில் மலரும்.

அன்னாள் - she அந்நாள் - on that day

அன்னை தெரசா காப்பகம் அமைத்தார்,
அன்னாளின் கருணை வணங்குதற்குரியது.
அன்னாளின் செயற்பாடு பெருமைக்குரியது.
அந்நாளில் வீரமுடையவர்கள் இருந்தனர்.
அந்நாளில் விடுதலை உணர்வு மிகுந்திருந்தது.

அன்னம் - bird, rice அண்ணம் - upper surface of mouth

அன்னம் ஒரு பறவை.
அன்னப் பறவை பாலையும் நீரையும் பிரித்து உண்ணும் என்பர்.
அன்னப் பறவை இன்று இல்லை.
அன்னம் இட்டு பிறர் பசி நீக்கு.
வாயின் உட்புறச் மேற்சுவர் அண்ணம் எனப்படும்.
நாக்கு மேலண்ணத்தை வருட 'ள' பிறக்கும்.

ஆனி - Tamil month ஆணி – nail, strong, prime

ஆனி மாதம் மழை பெய்யாது.
ஆணி அடித்துப் படத்தை மாட்டலாம்.
அவர் ஆணித்தரமாகப் பதிலளிப்பார்
ஆணிவேர் மண்ணில் நேராக இறங்கும்.
இருவிதையிலைத் தாவரத்திற்கு ஆணி வேர் உண்டு.

RangaRakes
tamilnavarasam.com

ஆல் - banyan tree ஆழ் - deep ஆள் - male/rule

ஆலமரம் அளவில் பெரியது. ஆலமரம் நிழல் தரும்.
ஆலும் வேலும் பல்லுக்குறுதி.
ஆழமான கிணறு வற்றாது.
கனவு என்பது ஆழ்மனப்பதிவின் வெளிப்பாடே.
ஆள்பவனுக்குத் துணிவு வேண்டும்.
கரும்பு வெட்டக் கூலியாள் வேண்டும்.
களையெடுக்கக் கூலியாள் வேண்டும்.

ஆரிய - race ஆறிய - get cold

ஆரியர் என்பவர் வடமொழி இனத்தவர்.
ஆரிய மொழிக்குப் பேச்சு வழக்கில்லை.
ஆறிய உணவு விரைவில் கெடும்.
தேநீர் ஆறிக் கிடக்கிறது.

இரை - feed இறை - learned person

புலியின் இரை மான் ஆகும்.
ஓடியதால் அவனுக்கு மூச்சிரைத்தது.
திருமண வீட்டில் இரைச்சல் அதிகம்.
எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்.

இழை - fibre இலை - leaf இளை – youth

இழைகள் நெய்யத் துணியாய் மாறும்.
இலை பச்சை நிறமுடையது.
இளைஞர்கள் ஆற்றல் உடையவர்கள்.

இலக்கம் - number இளக்கம் - loosen

5 என்பது ஓரிலக்க எண்.
பசை இளக்கமாக உள்ளது.
மூடி இளகினால் பால் சிந்தும்.

இலவு - இழவு - இளவல்

இலவு காத்த கிளியாய் அவன்.
இலவம்பஞ்சு ‘ மெத்தை ’ தைக்க உதவும்
அந்த வீட்டில் இழவு விழுந்திருக்கிறது.
அவன் பறையடித்து இழவுச் செய்தி கூறினான்.
இராமனின் இளவல் இலட்சுமணன்.
இளவட்டங்கள் துடிப்புடையவர்கள்.

RangaRakes
tamilnavarasam.com

இளித்து - இழிந்து

அங்கே பல் இளித்துக் கொண்டு நிற்காதே.
எவரையும் இழித்துரைக்காதே

இரக்கம் - pity இறக்கம் - slope

வறியவர்களிடம் இரக்கம் காட்ட வேண்டும்.
மலைப்பாதை இறக்கமுடையது.
ஏற்றம் இறக்கம் வாழ்விலும் உண்டு.

இரத்தல் - beg இறத்தல் - die

இரந்தும் உயிர் வாழல் வேண்டாம்.
பிச்சைக்காரன் இரந்து வாழ்கிறான்.
உணவு இல்லையேல் இறந்து விடுவர்.

இன்னார் - this type of person இந்நார் - this thread

இன்னார் - இந்த மாதிரியானவர்.
இன்னாரின் முகவரி இருக்கிறதா?
இந்நார் பச்சை வண்ணமாக இருக்கிறது.

ஈன்றாள் - give birth ஈந்தாள் - give

அன்னை பெண் குழந்தையை ஈன்றாள்.
ஈன்றவளுக்கே வலி தெரியும்.
தாய் தன் குழந்தைக்குப் பால் ஈந்தாள்.

உரை - scratch / talk உறை - cover

அட்டையை உரைத்து எண்ணைப் பார்.
அட்டையை உறைக்குள் போட்டு வை.
அவர் உரையை நான் கேட்டேன்.
மார்கழியில் உறைபனி மிகுதி.
இந்த மிளகாய் நல்ல உறைப்புடையது.

உழை - toil / work உலை - furnace

உழைத்தால் உயரலாம்.
உழைப்பவனின் உடல் வலிமையாக இருக்கும்.
கடின உழைப்பிற்கு ஈடு இணை இல்லை.
உலையில் வெப்பம் அதிகமாக இருக்கும்.
அணு உலையில் கதிர் வீச்சு இருக்கும்.

RangaRakes
tamilnavarasam.com

உழவு - plough உளவு - investigation

உழவர்கள் நிலத்தை உழவு செய்தனர்.
காவலர்கள் உண்மையறிய உளவு பார்த்தனர்.

உரம் - manure உறம் - strength

இயற்கை உரம் நிலத்துக்கு நல்லது.
உடற்பயிற்சி உடலுக்கு உறமேற்றும்.
நீர் உறம்பெடுத்து ஓடுகிறது.

உறி - hanging rope உரி - remove

உறியில் வைத்தவை பாதுகாப்பாக இருக்கும்
தேங்காய் மட்டையை உரித்தால் தேங்காய் கிடைக்கும்

உண்ணல் - eat உன்னல் - think

தலைவர் உண்ணா நோண்பு இருந்தார்.
அளவாக உண்ணல் உடலுக்கு நல்லது.
உன்னல் என்பது ஆழச் சிந்தித்தல்.

உன் - you உண் - eat

உன் வீடு எங்குள்ளது ?
உன் பெயர் என்ன ?
பிறருக்கு உணவிட்டு, பிறகு உண்.
புலால் உண்ணாமை உடலுக்கு நல்லது.

ஊண் - food ஊன் - flesh

ஊணும் உறக்கமும் இன்றி பணியாற்று.
தன் ஊன் பெருக்க பிற ஊன் உண்ணலாமா?

எரி - burn எறி - throw

அடுப்பில் தீ எரிகிறது.
அகல் விளக்கு எரிகிறது. எரிதலுக்குக் காற்று வேண்டும்.
எரிகிற வீட்டில் பிடுங்கியது மிச்சம்.
பாலன் பந்து எறிகிறான்.
வேண்டாதவற்றைக் குப்பையில் எறி.

எண் - number என் - my

எண்களை வரிசையாக எழுதவும்.
எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.
இது என்னுடைய குறிப்பேடு.
எனக்குக் கைகள் இரண்டு.

RangaRakes
tamilnavarasam.com

எண்ணை - number எண்ணெய் - oil என்னை - my

எண்ணை அறியக் கற்களை எண்ணிப் பழகவும்.
தேங்காய் எண்ணெய் தலையில் தேய்த்தால் முடி நன்கு வளரும்.
இவர் என்னைப் படிக்க வைத்த ஆசிரியர்.
என்னை வெல்ல யாரால் முடியும் ?

எண்பது - eighty என்பது - which is

எட்டு பத்துகள் சேர்ந்தால் எண்பது ஆகும்.
எண்பது ரூபாய் கொடுக்கவும்.
ரூபாய் என்பது இந்திய நாணயம்.

என்னாள் - my man எந்நாள் - what day

தமிழ்ச்செல்வன் என்னாள். (என் ஆள்)
விடிவு எந்நாளில் வரும் ?

ஏரி - lake ஏறி - climb

ஏரியில் நீர் நிறைந்துள்ளது.
ஏரியில் படகு செல்கிறது.
மரத்தில் ஏறி விளையாடலாமா?
மலையேறும் குழுவில் 10 பேர் உள்ளனர்.

ஒலி - sound ஒளி - light ஒழி - destroy

பாட்டின் ஒலியைக் குறைத்து வைக்கவும்.
காற்றொலிப்பான் தடை செய்யப்பட்ட பகுதி இது.
அதிக ஒளி கண்ணுக்குக் கேடு.
வண்ண விளக்கு ஒளிர்கிறது.
தீயனவற்றை ஒழித்து விடலாம்.

ஒரு - one ஒறு - punish

ஒரு மடல் எழுதியுள்ளேன்.
ஒரு நாளில் முடிவு தெரியும்.
ஒறுத்தல் தவறு செய்தமைக்குத் தீர்வாகாது.

களி - joy கழி - minus / stick

அவன் களிப்பு மிகுதியால் ஆடினான்.
சிறையில் சோளக்களி கிடைக்கும்.
பத்திலிருந்து நான்கைக் கழி.
அந்த நாளில் நிலத்தைக் கழி கொண்டு அளந்தனர்.

RangaRakes
tamilnavarasam.com

களம் - field கலம் - utensil

கால்பந்து ஆடுகளம் அருமையாக உள்ளது.
களத்து மேட்டில் நெல் அளக்கிறார்கள்.
உண்கலத்தை நன்கு கழுவிய பின்னரே உணவு உண்ணுக.

கனி - fruit கணி - calculate

நெல்லிக்கனி 'சி' உயிர்ச் சத்துடையது.
அவன் கனிவாகப் பேசினான்.
கணிப்பொறி அனைத்தும் செய்யும்.
கணித்து வாழ அனைத்தும் கிட்டும்.

கல் - stone / education கள் - toddy

பாறை உடைந்ததால் கல் உருவானது.
இளமையில் கல்.
தென்னை மரத்தில் கள் வடிந்தது.
கள் உண்டவன் தள்ளாடுவான்.

கன்னி - young lady கண்ணி - one with eye

இளம் பெண்ணை கன்னி என்கிறோம்.
கண்களை உடையவள் கண்ணி.
சங்கிலியில் கண்ணி விடுபட்டுள்ளது.

கலை - art களை - weeds கழை - bamboo

இசைக் கலைஞன் பாடல் பாடினான்.
வரைகலை ஈர்ப்புடையது.
நிலத்திலுள்ள களை பயிருக்கு எதிரி.
கரும்புத் தோட்டத்தில் நெல்லும் களைதான்.
ஆட்டம் களைகட்டுகிறது.
மூங்கில் வைத்து ஆடுபவர் கழைக்கூத்தாடி.

கரை - river bank கறை - stain

ஆற்றின் இருபுறமும் கரை உண்டு.
ஆற்றங்கரை அழகாக இருக்கிறது.
ஆடையில் பட்ட கறை என்றும் போகாது.

கரி - black கறி - mutton

யானையைக் கரி என்றும் அழைப்பர்.
அடுப்புக்கரி கருப்பு நிறமுடையது.
கறிச்சுவை உண்ணத் தூண்டுவது.
ஆட்டுக்கறி சாப்பிடுவாயா ?
கோழிக் கறி ஒரு கிலோ உரூவா. 50.

RangaRakes tamilnavarasam.com

காலை - morning காளை - bullock

காலை வணக்கம் சொல்லுவோமா?
காலை இழந்தவன் நொண்டி.
காலையில் எழுந்ததும் உடற்பயிற்சி செய்.
காளை மாடு வண்டியிழுக்கும்.

காளி - angry lady காலி - with leg

சினப்பட்ட பெண்ணை காளி என்பர்.
காளி என்பவள் பெண் தெய்வம்.
நான்கு கால்களை உடையது நாற்காலி.
அமீபா பொய்காலி வகையைச் சார்ந்தது.
மூன்று கால்களை உடையது முக்காலி.

கான் - forest காண் - see (காணல், காண்பது, கண்டு, கண்ட)

கான் விலங்குகளை அழிய விடலாமா?
கானல் நீர் என்பது மாயத் தோற்றம்.
கண்ணால் காண்பது மெய்யல்ல.

கனை - clear throat கணை - arrow

குதிரை கனைத்தது.
நஞ்சு தோய்ந்த கணை ஆளைக் கொல்லும்.
பகைவரின் நெஞ்சில் கணையைப் பாய்ச்சினான்.

கனி - fruit கணி - predict

மாங்கனி சுவையாக இருக்கும்.
அவன் கனிவாகப் பேசுவான்.
காலத்தைக் கணித்துக் கூறுபவர் கணியர்.
கணிப்பொறி மேசையில் உள்ளது.

காணல் - see கானல் - illussion

இன்று நேர்காணல் உண்டு.
கனாக் காணல் எல்லோர்க்கும் இயல்பு.
பூங்கா காணுதல் மகிழ்வு தரும்.
கானல் நீரில் மீன்பிடிக்க இயலுமா?

கிளி - parrot கிலி - fear கிழி - torn

கிளி பறக்கும். கிளி பச்சை நிறமுடையது.
அவன் மனதில் கிலி கொண்டு அலைகிறான்.
தாளைக் கிழித்தால் குப்பைக் கூடையில் போடவும்.

RangaRakes tamilnavarasam.com

கிளவி - type of word கிழவி - old lady

‘ கல கல ’ - என்பது இரட்டைக்கிளவி.
அகவை முதிர்ந்த பெண் - கிழவி.

குலை - bark குழை - mix

நாய் குலைக்கும்.
என் நம்பிக்கை குலைந்தது.
வாழை குலை தள்ளியுள்ளது.
மருந்தைத் தேனில் குழைத்து உண்.
அதிகம் வெந்தால் சோறு குழைந்துவிடும்.

குறை - defect குரை - bark

இசையின் ஒலியைக் குறைத்து வை.
எந்தக் குறையும் முயன்றால் நீங்கும்.
அயலவரைக் கண்டால் நாய் குரைக்கும்.
குரைக்கிற நாய் கடிக்காது.

குழி - pit குளி - bath

பாதையில் உள்ள குழியைப் பார்த்து நட.
வான்தாக்குதலிலிருந்து தப்பிக்க பதுங்குகுழி உதவும்.
பல்லாங்குழி விளையாடலாமா ?
காலையில் குளித்தல் உடலுக்கு நல்லது.

குழம்பு - sauce குளம்பு - hoof

புலால் குழம்பு மணக்கிறது.
அவன் குழம்பிய மனநிலையில் உள்ளான்.
கால்நடைகளுக்குக் காலில் குளம்பு உண்டு.
மாட்டின் குளம்புக்கு லாடம் அடிப்பார்கள்.

குரல் - tone குறள் - tamil poem

உனது குரல் இனிமையாக உள்ளது.
குரல் நாண் அதிர்ந்தால் பேச்சு வரும்.
இரண்டு அடிகளை உடையது திருக்குறள்.
திருக்குறளைத் நாளும் படி.

குளவி - insect குழவி - child

குளவி கொட்டினால் கடுகடுக்கும்.
குளவி பூச்சி வகையைச் சேர்ந்தது.
குழவி சிரித்தால் மகிழ்வு பிறக்கும்.
ஆட்டாங்குழவி எங்குள்ளது ?
குழவிக்கல் உடைந்து விட்டது.

RangaRakes
tamilnavarasam.com

குளம் - pond குலம் - caste

குளம் நிறைய நீர் இருக்கும்.
குளத்தில் தாமரை பூத்துள்ளது.
குலம் என்பது சாதியில் ஒரு பிரிவு.
குலம் கருதின் தனிமை மிகும்.

குறவர் - a caste குரவர் - parents

குறவர் பாடல்களைப் பாடி குறி சொல்லுவர்.
குரவரின் அன்பு கிடைத்தற்கரியது. (குரவர் - தலைவர் என்னும் பொருளது)
சமயக் குரவர்கள் சமயத்தைப் பரப்பினார்கள்.

குற்றுதல் - removing husk from the paddy குத்துதல் - strike on the body

நெல் குற்றினால் அரிசி கிடைக்கும்.
பச்சை குத்தினால் என்றும் அழியாது.
அவன் குத்துச் சண்டை வீரன்.

கூரிய - sharp கூறிய - said

கத்தியின் முனை கூரியது.
உன் புத்தியைக் கூர்மையாக்கு.
வள்ளுவர் கூறியவை கேள்.
நேர் கூற்று, எதிர் கூற்று இரண்டும் உணர்.

கூரை - house top கூறை - new cloth

இந்த வீட்டுக்கூரை ஓட்டினால் ஆனது.
குடிசை வீட்டின் கூரை ஓலையால் ஆனது.
கூறைச் சீலை அழகாக இருக்கிறது.

கூறு - tell கூரு - sharp edge

நான் கூறியதைத் திரும்பக் கூறு.
இது கூருடைய கரிக்கோல்.

கொல் - kill கொள் - get

உயிரைக் கொல்வதால் பயனில்லை.
கொல்லாமை என்பது உயரிய செயல்.
பல்வகைத் திறனை உனதாக்கிக் கொள்.
தேநீரை எடுத்துக்கொள், குடி.

கோல் - stick கோள் - planet

கோல் எடுத்தால் குரங்கு ஆடும்.
பாண்டியன் செங்கோல் வளையாதிருந்தது.
கோள்கள் சூரியனைச் சுற்றும்.
கோள்கள் கோளவடிவம் உடையவை.

RangaRakes
tamilnavarasam.com

கோலம் - Art, கோளம் - sphere

அலங்கோலமாக அலையாதே.
விதவைக்கோலம் காணக் கொடுமையானது.
மாக்கோலமிட்டு வாசற்படியை அழகுசெய்.
பூமி கோளவடிவமானது.
தாமரை இலைத் தண்ணீர் கோள வடிவில் உருளும்.

கோருதல் - desire கோறல் - kill

விடுப்பு கோருதல் முறையானது.
கோரிக்கையை முன்வைத்து உண்ணாவிரதம் நடைபெறுகிறது.
கோறல் என்பது கொல்லுதல் ஆகும்.

சளி - mucus சலி - move

சளி பிடித்தால் மூக்கு ஒழுகும்.
பனிக்காலத்தில் சளி பிடிக்கும்.
மணலைச் சலித்து வீடு கட்டலாம்.
சலிப்பு அதிகமானால் ஓய்வு எடு.

சிரை - vein சிறை - jail

தமனி, சிரை என இரத்தக் குழாய்கள் இரு வகைப்படும்.
அசுத்த இரத்தம் ஓடுவது சிரை.
தவறுசெய்தால் சிறைத் தண்டனை கிடைக்கும்.
பெரிதும் கொடியது தனிமைச் சிறை.

சீரிய - famous சீறிய - snake's sound

சீரிய செயல்களால் நாடே உயரும்.
பாம்பு சீறுவது தற்காப்புக்கே.

சீரடி - famous foot சீறடி - small foot

அப்பெண் சீரடி வைத்து நடந்தாள்.
அவன் தலைவரின் சீரடி பின்பற்றினான்.
குழந்தையின் சீறடி கொண்டாட்டம் அளிக்கும்.

சுண்ணம் - scented powder சுன்னம் - zero

சுண்ணம் பூச சுவர் வெளுத்தது.
சுண்ணம் குழைந்த உடல் கண்டான்.
ஒன்றுமில்லாததைச் சுன்னம் எனலாம்.
சுன்னம் என்பது சுழியம் பொருளது.

RangaRakes
tamilnavarasam.com

சூலை - heat சூளை - kiln

சூலை நோயால் அப்பர் வருந்தினார்.
சூலை என்பது ஆங்கில மாதத்தின் பெயர்.
பானையைச் சூளையில் சுடலாம்.

சூல் - pregnant சூள் - oth

சூல் கொண்ட மலர் காயாகும்.
சூல் கொண்ட பெண்ணின் வயிறு பெருக்கும்.
சூளுறைத்துச் செயலாற்றுவோன் வெற்றி காண்பான்.
கண்ணகி சிலம்பெடுத்துச் சூளுறைத்தாள்.

சேனை - military சேணை - vegetable

சேனையுடையவன் போருக்கு அஞ்சான்.
சேணைக்கிழங்கு சுவையான உணவு.

சேரு - joined சேறு- mud

நீ சேர்கிற மனிதர் நல்லவரா ?
சேருவார் அறிந்து சேர்.
இன்று இரவுக்குள் ஊர் சேரவேண்டும்.
இந்தப் பாதையில் சேறு அதிகம்.
குயவர்கள் சேறு குழைத்துப் பானை உருவாக்குவர்.

சொரி - flow down சொறி - itch

மணமக்களுக்குப் பூச் சொரிந்தனர்.
சொறி உடையவன் கை சும்மா இருக்காது.
சிரங்கு இருந்தால் சொறியத் தோன்றும்.

தங்கல் - stay தங்கள் - your

இன்றிரவு எங்கே தங்கல்?
தங்கள் ஆதரவு வேண்டும்.

தனி - single தணி - decrease

தனியொருவனாகச் சுருங்கி விடாதே.
தனிமையிலே இனிமை காண முடியுமா ?
தனித்து நின்று வெற்றி காண்.
அவர் சினம் தணிந்ததா?
தண்ணீர் குடிக்கத் தாகம் தணிந்தது.

RangaRakes
tamilnavarasam.com

தவளை - frog தவலை - utensil

தவளை நீரிலும் நிலத்திலும் இருக்கும்.
தவளையைப் பாம்பு உண்ணும்.
தவலையில் நீர் நிறைத்து வை.
செம்புத் தவலையில் விலை அதிகம்.

தலம் - place தளம் - basement

கற்றுத்தரும் பள்ளி ஒரு வழிபாட்டுத்தலம்.
முதல் தளத்தில் கணினி அறை உள்ளது.
கட்டடத்தின் உறுதி அடித்தளத்தில் உள்ளது.

தன் - myself தண் - cool

தன்கையே தனக்குதவி.
தன் வீடு தன் பெண்டு எனச் சுருங்கிவிடாதே.
அதன் பெயர் என்ன ?
தண்ணீர் குளிர்ச்சியுடையது.
(தண்டமிழ் - இனிய தமிழ், தண்கதிர் - திங்கள் சந்திரன், தண்டம் - தண்டனை)

தன்மை - habit தண்மை - cool

இழி தன்மை வேண்டாம். உயர் தன்மை மேற்கொள்.
மலை முகடு பனி தண்மையாக இருக்கும்.

தாலி - marriage badge தாழி - large pan / bowl தாளி - add flavour

அவன், மனைவி கழுத்தில் தாலி கட்டினான்.
மணமான பெண்ணின் கழுத்தில் தாலி இருக்கும்.
முதுமக்கள் இறந்தவர்களைத் தாழியில் வைத்துப் புதைத்தனர்.
குழம்பு தாளித்தால் மணம் பரவும்.

தாழ் - latch தால் - tongue தாள் - paper

கதவை உள்புறமாகத் தாழ் போடவும்.
தால் அசையப் பாடுவதே தாலாட்டு.
தாள் எழுத உதவும்.

தழை - leaf தலை - head தளை - bondage

ஆடு தழை தின்னும்.
ஆட்டுக்குத் தலை உண்டு.
காவலர்கள் அவனைத் தளைப்படுத்தி அழைத்து வந்தனர்.

RangaRakes
tamilnavarasam.com

தினை - food grain திணை - section

தினை விதைத்தால் தினை விளையும்.
நான்காம் திணை படித்தாயா?
உயர்திணை என்பது மக்களைக் குறிக்கும்.

தின் - eat திண் - strength

அதிகம் தின்னுவது உடல்நலக் கேடானது.
திண்தோள் வலிமை பயிற்சியால் மிகும்.

துரை - noble person துறை - river bank

நம்மை ஆங்கிலத்துரைமார் அடிமைப்படுத்தினர்.
படித்துறையில் துணி துவைக்கலாம்.
சட்டம் ஒழுங்கை முறைபடுத்துவது காவல்துறை.
பொதுப்பணித்துறை சாலை அமைக்கும்.

துரத்தல் - drive out துறத்தல் - remove habbits

திருடியவனை வெளியே துரத்தினார்கள்.
புத்தர் ஆசையைத் துறந்தவர்.

துறவு - saint துரவு - deep well

அனைத்தும் துறந்தவர் துறவி ஆவார்.
தோப்பு துரவு உடையவர் இவர்.

தெரி - understand தெறி - bounce

மிதி வண்டி ஓட்ட உனக்குத் தெரியுமா ?
இரவில் சூரியன் வானத்தில் தெரியுமா ?
ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்.
பந்து சுவரில் பட்டுத் தெறித்தது.

தேநீர் - tea தேனீர் - honey water

தேயிலை வடிநீர் தேநீர் என்றாகும்.
தேன் கலந்த நீர் தேனீர் என்றாகும்.

தோல் - skin தோள் - shoulder

அவனது தோல் மாநிறமானது.
மாட்டுத் தோலில் செருப்புத் தைக்கலாம்
அவனது தோள்கள் உறுதியானவை.

RangaRakes
tamilnavarasam.com

நரை - white hair நறை - smell

வயதானால் தலை மயிர் நரைக்கும்.
இந்தப் பூ நறுமணம் உடையது.
பூ நறை மன்றத்தை நிரப்பியது.

நால் - four நாள் - day

நால்வரும் இங்கே வருக வருக.
எந்த நாளும் இனிய நாளே.

நான் - me நாண் - string

நான் என இருத்தல் நலம் தராது.
வில்லின் நாண் அம்பு எய்ய உதவும்.

நிரை - line நிறை - weight

ஆநிரை கூட்டம் வயலில் உள்ளன.
ஒவ்வொரு பசுவும் அதிக நிறை உடையது.

நீலம் - blue நீளம் - length

வானும் கடலும் நீல நிறம்.
கடலின் நீளம் மிகவும் அதிகம்.
வானத்தின் நீளம் அளக்க முடியாது.

பரி - boat பறி - snatch

பரிசல் இருந்தால் ஆற்றைக் கடக்கலாம்.
வழிப்பறி செய்வோர் காட்டில் இருப்பர்.
தென்னை மரத்தில் தேங்காய் பறி.

பரவை - sea பறவை - bird

பரவை என்பது கடலின் மறுபெயர்.
பரதவர் என்போர் கடற் பணிபுரிவோர்.
பறவை பறக்க இறக்கை வேண்டும்.

பழி - curse பலி - victim

பழிச்சொல் ஏற்றல் இழிச்செயல் ஆகும்.
‘ பழிக்குப் பழி ’ பண்பிலாச் செயலே.
உயிர்ப்பலி கொடுத்தல் உயர்ந்தோர் செயல் இல்லை.
பலியிடல் பாவம், அதுவும் உயிரே.

பள்ளி - school பல்லி - lizard

இது எனது பள்ளி.
பல்லி முட்டையிட்டு இனம் பெருக்கும்.
பல்லி ஊர்வன வகையைச் சேர்ந்தது.

RangaRakes
tamilnavarasam.com

பரந்த - spread பறந்த - fly

பரந்த உலகில் எங்கும் வாழலாம்.
பறவை பறந்திட இறக்கை உதவும்.

பனி - mist பணி - work

பனிக்குளிருக்கு தலைக்குல்லாய் உதவும்.
பணிஓய்வு என்பது சோம்பலை ஊக்கும்.
நற்பணி செய்திட நெஞ்சம் நிமிரும்.
பணியில் சிறக்க வாழ்வு சிறக்கும்.

பழம் - fruit பலம் - strength

எலுமிச்சம்பழம் புளிப்புச் சுவையுடையது.
பழம் உண்ண மலச்சிக்கல் அகலும்.
சரிவிகித உணவே உடலுக்குப் பலம் தரும்.

பாரை - crow bar பாறை - rock

கடப்பாரை கொண்டு குழி தோண்டலாம்.
பாறை உடைக்க வெடிமருந்து வேண்டும்.

பாலை - desert பாளை - spathe of palms

பாலைவனக் கப்பல் ஒட்டகமாகும்.
பாலைக் காய்ச்சிக் குடிக்க வேண்டும்.
தென்னம்பாளை நார் கிழிக்க உதவும்.

பால் - milk பாழ் - ruin

தாய்ப்பால் குழந்தைக்கு நல்லது.
புட்டிப்பால் உடல்நலத்தைப் பாழாக்கும்.

புகழ் - praise/fame புகல் - get in

புகழ்ச்சிக்கு மயங்காதே.
அனைத்து இடத்தும் புகை புகல் எளிது.

புரம் - place புறம் - outer

பெண்கள் அந்தப்புரத்தில் இருப்பார்கள்.
கோட்டையின் புறத்தில் உள்ள மதில் கோட்டையைக் காக்கும்.
புறவழிச் சாலையில் வண்டி ஓட்டுதல் எளிது.

RangaRakes
tamilnavarasam.com

புளி - tamarind புலி - tiger

உணவில் புளி அதிகமானால் மூட்டுவலி தொடரும்.
குட்டிப் புலியும் வீறுடன் இருக்கும்.
வேங்கைப் புலியும் தாவிப் பாயும்.

புள் - bird புல் - grass

புள்ளினம் பறப்பதைக் காண்பது மகிழ்ச்சி.
புல்லைக் கண்டால் ஆடு ஓடிவரும்.
புல்தரை பார்ப்பதற்கு அழகு.

புள்ளி - dot புல்லி - external petal of a flower

புள்ளி உள்ள எழுத்து மெய்யெழுத்தாகும்.
தமிழ்க் குமுகாயத்தின் முதன்மைப் புள்ளி யார் ?
பூவின் புல்லிதழ் பூவுக்கு அழகுதரும்.
பூவின் புறஅடுக்கு புல்லி வட்டம் எனப்படும்.

பேன் - insect பேண் - protect

பேன் உடைய தலை அரிப்பெடுத்திருக்கும்.
பேணாது விட்டால் பொடுகு உடன் வரும்.

பொரித்தல் - egg hatching பொறித்தல் - engraving in stone

முட்டை பொரித்தால் குஞ்சு வெளிவரும்.
பொரித்த உணவு சுவையாய் இருக்கும்.
கல்லில் பொறித்த பெயர் காலமெலாம் நிற்கும்.
இமயம் சென்று தமிழ்ப் பெயர் பொறித்தான்.

பொறி - machine பொரி - food

அறிவின் வாயில்கள் ஐம்பொறி ஆகும்.
கணிப்பொறி இனிமேல் ஆட்சி செலுத்தும்.
தீப்பொறி வீழின் தீப்பிடிக்கும்.
பொறியில் அடித்தால் இறப்பு உறுதி.
அரிசிப் பொரி சுவையாய் இருக்கும்.
சோளப் பொரி சாப்பிடப் பிடிக்கும்.

பொருப்பு - mountain பொறுப்பு - responsibility

இமயப் பொருப்பு வடக்கே இருக்கு.
பொறுப்பு கிடைத்தால் விருப்புடன் பணி செய்.
பொறுப்புடன் செய்தால் பணி சிறக்கும்.
தமிழ் மொழி வளர்த்துதல் தமிழரின் பொறுப்பே.

RangaRakes
tamilnavarasam.com

பெரு - big பெறு - get

பெருவிருப்பு உடையோர்க்கு ஏமாற்றம் விளையும்.
(பெருகுதல், பெருக்கம், பெருக்கல், பெருக்கு, பெருங்கலம், பெருநாள், பெருமிதம், பெருநெறி, பெருந்தகை, பெருமான், பெருமிதம், பெருஞ்சிறப்பு)
பெறுவதைக் கொண்டு வாழ்வினை உயர்த்திடு.
உழைத்தால் உயர்வு பெறுவது உறுதி.

மரம் - tree மறம் - courage

மரம் நடுதல் அறத்தின்பாற் பட்டதே.
மரம் நடு மழை பெறு.
பழந்தமிழர் மறவராக வாழ்ந்தனர்.

மனம் - mind மணம் - smell

மனம் சொல் செயலில் உண்மை வேண்டும்.
மனத்தளவிலும் கேடு எண்ணாதே.
அரைக்க அரைக்க சந்தனம் மணக்கும்.

மருமகன் - son in law மறுமகன் - another son

மருமகன் என்பவன் மகளின் கணவன்.
மறுமகன் என்பவன் வேறு மகனாம்.

மருப்பு - tusk மறுப்பு - refuse

யாணையின் மருப்பு பல்லின் நீட்சியே.
நல்லது மறுத்தால் தீயது உடன் வரும்.

மன் - mind மண் - sand/ land

குற்றமற்ற மனம் கோடிகோடி தரும்.
மண் நலம் காத்தல் மாந்தர்க்குக் கடனே.

மலை - mountain மழை - rain

மலைவளம் காணல் மனதிற்கு இனியது.
மலையின் உயரம் மலைத்திட வைக்கும்.
மழை பொழிய மரம் நட வேண்டும்.
மழையே மண்ணின் உயிராய் அமையும்.

மரை - lotus மறை - secret

தாமரை தண்ணீரில் வளரும்.
திருகாணியில் மரை உள்ளது.
மரத்தை மறைத்தது மாமத யானை.
(மறைதல், மறைத்தல், மறைத்தலைவி, மறைவிடம், மறையோன், மறைவு)

RangaRakes
tamilnavarasam.com

மாரி - rain மாறி - change

மாரி இல்லையேல் உயிர்கள் இல்லை.
மாறி மாறி புதியன தோன்றும்.

மான் - deer மாண் - famous

மானின் கொம்பு அழகாக இருக்கும்.
மாண்புமிகு முதல்வர் நாளை வருகிறார்.

முன்னாள் - ancient days முந்நாள் - three days

முன்னாள் மாந்தன் அறிவியல் அறியான்.
முன்னாள் மாந்தன் காடுகளில் வாழ்ந்தான்.
விருந்தும் மருந்தும் முந்நாள் போதும்.

முன்னூறு - before hundred முந்நூறு - three hundred

நூறுக்கு முன் உள்ள எண் முன்னூறு.
முந்நூறு ரூபாய் கடனாகத் தாருங்கள். (மூன்று நூறு ரூபாய்)

மூலை - corner மூளை - brain

புத்தகத்தின் மூலையை மடிக்காதே.
ஒவ்வொரு அறைக்கும் நான்கு மூலைதான்.
மூளை உடையவன் முழுவதும் பெறுவான்.
மண்டையோட்டிற்குள் மூளை உள்ளது.

வரி - line வறி - poor

வரி வரியாக எழுதிடல் அழகாம்.
வறியவர்க்கிங்கே உதவிடல் அழகாம்.

வலை - net வளை - bend

வலை இருந்தால் மீனைப் பிடிக்கலாம்.
கொசு வலைக்குள் மனிதன் தூங்குவான்.
அகவை முதிர்ந்தால் முதுகும் வளையும்.
மலைப்பாதை வளைந்து வளைந்து செல்லும்.

வலம் - right வளம் - resource

சரியாக இருந்தால் வலக்கையைத் தூக்குக.
வலம் இடம் இரண்டும் பக்கங்கள்.
மண் வளம் இருந்தால் பயிர்கள் செழிக்கும்.
வளமான வாழ்க்கைக்குச் சிக்கனம் வேண்டும்.
நமது நாட்டில் நீர்வளம் உண்டு, நிலவளம் உண்டு.

tamilnavarasam.com

வன்மை - strength வண்மை - giving mind

பஞ்சு மென்மையானது, கல் வன்மையானது.
நாவண்மை உடையவன் நன்கு பேசுவான்.

வழி - way வலி - pain வளி - air

வழி விட்டுச் செல்வது ஊர்திக்கழகு.
அகவை முதிர்ந்தால் கால் வலி தெரியும்.
வளி மண்டலம் இல்லையேல் உயிர்கள் இல்லை.

வாளி - bucket வாழி - may you prosper

வாளி நிறைய தண்ணீர் நிரப்பு.
வாழி என்று மக்களை வாழ்த்து.
வளமுடன் வாழி - அனைவரும் வாழ்த்தினர்.

வாள் - saw வால் - tail வாழ் - live

வாள் கொண்டு அறுக்க மரம் இரண்டாகும்.
குரங்குக்கு வாலே கையாய் உதவும்.
வாழ்நாள் முழுவதும் நிறைவாய் வாழ்க.

விலை - prise விழை - want விளை - grow

இந்தப் பையின் விலை என்ன? இதன் விலை உரூ10.
தாங்கள் நலம் பெற விழைகின்றேன்.
இந்த ஆண்டு விளைச்சல் மிகுதி.

விழா - function விலா - rib

ஆண்டுவிழாவில் மாணவர்கள் ஆடிப்பாடினர்.
நெஞ்சில் இருப்பது விலா எலும்பு.

விழி - eye விளி - call

விழி விழி உன் விழி நெருப்பு விழி.
விளி விளி மக்களைத் தமிழில் விளி.

விலங்கு - animal விளங்கு - understand

ஆடும் மாடும் விலங்கு வகையாம்.
பாடம் விளங்கினால் புரிதல் கூடும்.

விலக்கு - remove விளக்கு - lamp

தீய செயலை நீயும் விலக்கு.
விளக்கு எரிந்தால் வெளிச்சம் கிட்டும்.

வெல்லம் - jaggery வெள்ளம் - flood / large number

வெல்லத்துண்டு இனிப்பாய் இருக்கும்.
ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

வேளை - time வேலை - work

ஒவ்வொரு வேலைக்கும் உண்பதே வேலையாய் சோம்பேறி இருப்பான்.
வேலை செய்து, பின் உண்பது மனிதனை உயர்த்தும்.

வேல் - sharp instrument வேள் - beautiful man

இலக்கு நோக்கி வேல் கொண்டு எறி.
வேள்பாரி மன்னன் கொடையுள்ளம் உடையவன்.

RangaRakes
tamilnavarasam.com